1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இது ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை ஆகும். இது பற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைப் படைப்புக்கள் அரிதாக உள்ளன. எளிதாக அந்தப் புத்தகங்களை வாங்குவதற்கு புதிய பிரதிகளை அச்சிட்டு பாரதிதாசனின் பிறந்த நாளில் விநியோகப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இது போன்ற கேள்விக்குத்தான் முன்னாலே நான் பதில் சொல்லியிருக்கின்றேன். இப்பொழுது பிறந்த நாளன்று அதை பதிப்பகத்தார்கள் வெளியிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, புரட்சிப் புலவன் பாரதிதாசனுடைய பிறந்த நாளை முன்னிட்டு அவர் எழுதிய கவிதைகளில் போட்டியை வைத்து, அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்குமிடையில் அந்தப் போட்டியை நடத்தி, பரிசுகள் வழங்குவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இதுபோன்ற விழா நாட்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த நாள் விழாவிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்கல்.

* வின-448 திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு செய்தி—சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

சிதம்பரம் வட்டம், பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளதை அடுத்து எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக மேம்படுத்த அங்கு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், படகுவீடு, தோணித்துறை ஆகியவற்றை அமைக்கலாம் என்ற திட்டம் பரிசீலனையில் உள்ளது.

LEGISLATIVE ... TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

திரு. துரை. கலியமூர்த்தி : தலைவரவர்களே, பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அங்கே எல்லா வசதிகளையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ரோடு வசதியை முதலில் செய்ய வேண்டும். அடுத்து இறால் உற்பத்தித் தொழிலைப் பெருக்குவதற்காக மத்திய சர்க்கார் மூலம் ஏற்படுத்திஞர்கள். அது விரைவில் முடிக்கப்படுமா, தமிழக அரசு அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—தலைவரவர்களே, இறால் உற்பத்தியைப்பற்றிய கேள்வியை மீன் வளத்துறை அமைச்சரிடத்தில் கேட்டால் தகுந்த பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

*விஞ—449— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட விஞக்கு விடையளிப்பாரா;

வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 120 ஆசிரியர்களில் இன்னும் 78 ஆசிரியர்களுக்கு ஜி. ஓ. நெ. 1395, கல்வி, நாள் 17—6—1977-படி வேலை கொடுக்கப்படாததற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வட ஆற்காடு மாவட்டத்தில் 1976-77 கல்வியாண்டின் இறுதியில் அரசுப் பள்ளிகளிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 131 தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரும் 1977 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு விட்டனர்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே அப்படிப் பணி நீக்கம் செய்யப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் பணி நீக்கம் செய்யப்படாமல் அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தகுதித் தேர்வு எழுதி அவர்களுடைய வேலையை நிரந்தரமாக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.